178—

விமான நிலைய விரிவாக்கம்

*25909—**திரு. பழனிவேல் தியாக ராஜன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை விமான நிலைய விரிவாக்கப் பணிகளுக்காக நிலம் முழுமையாக கையகப்படுத்தப்பட்டு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதனை இந்திய விமான நிலைய ஆணையத்திடம் அரசு எப்போது ஒப்படைத்தது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை விமான நிலைய விரிவாக்கத் திட்டத்திற்காக மதுரை மாவட்டம், மதுரை தெற்கு மற்றும் திருப்பரங்குன்றம் வட்டத்திற்குட்பட்ட அயன்பாப்பாகுடி, குசவன்குண்டு, பாப்பானோடை, கூடல்செங்குளம், பெருங்குடி மற்றும் இராமன்குளம் ஆகிய கிராமங்களில் 46.11 ஏக்கர் நஞ்சை நிலங்கள், 420.32 ஏக்கர் புஞ்சை நிலங்கள், 149.49 ஏக்கர் அரசு புறம்போக்கு நிலங்கள் என மொத்தம் 615.92 ஏக்கர் நிலங்களை தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997–ன்கீழ் கையகப்படுத்த நிருவாக அனுமதி அரசாணை (4டி) எண் 3, போக்குவரத்து (ஐ–2) துறை, நாள் 29–3–2013–ல் வழங்கப்பட்டது. இவற்றில், 456.41 ஏக்கர் பட்டா நிலங்களுக்கு தமிழ்நாடு தொழிலியல் நோக்கங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1997–ன் பிரிவு 3(1)–ன்கீழ் அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிலம் கையகம் செய்யப்பட வேண்டிய புலங்களுக்கு நில மதிப்பு நிர்ணயம் செய்து, கூடுதல் தலைமைச் செயலர்/நில நிருவாக ஆணையர் அவர்களிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. இந்நிலங்களுக்கான உத்தேச நில மதிப்பு ரூ.116,20,92,433/– ஆகும். மேற்கண்ட தொகையை வழங்குவதற்கான கருத்துரு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து பெறப்பட்டு, அரசின் ஆய்வில் உள்ளது. தனி வட்டாட்சியர் (நில எடுப்பு) அவர்களால் நில உடைமையாளர்களிடம் தீர்வாணைய விசாரணை முடிவுற்றவுடன், நில மதிப்புத் தொகை நில உடைமையாளர்களுக்கு வழங்கப்படும். பின்பு, கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் இந்திய

[*2017 ஜூலை 11*

விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.*

திரு. பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. 2007–லேயே* Master Plan*–பெருந்திட்டம் விரிவாக்கத்திற்கு அறிவிப்பு பிறப்பிக்கப்பட்டு, 2008–ல் பிறப்பிக்கப்பட்ட முதல் அரசாணையின்படி 615 ஏக்கர் நிலம் கொடுப்பதாக அறிவித்த பிறகும், இன்னும் இந்த நிலத்தைக் கொடுக்காத சூழ்நிலையில், மதுரையில் பெரிய நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால், விமான நிலையத்தினுடைய* operating licence*–ஐ* D.C.G.A. *கொடுக்க வேண்டும்.* D.C.G.A. *கொடுத்த* licence*–ல் ஏற்கெனவே ஆறு குறைபாடுகளைச் சொல்லி, தற்காலிக விதிவிலக்குக் கொடுத்துதான்* temporary operating licence*–ஐ கொடுத்திருக்கிறார்கள். அதில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால்,* Air Traffic Control *போதவில்லை,* Technical Centre *போதவில்லை, விமானம் இறங்கும் இடத்தில் தனி நபர் சொத்தில் தென்னை மரங்கள் இருக்கின்றன என்பன போன்ற* safety problems*–ஐ குறிப்பிட்டு, 2020 ஆம் ஆண்டுக்குள் இவையெல்லாம் திருத்தப்பட்டால்தான்* licence renewal *செய்ய முடியும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். நடுவில், நிறைய வளர்ச்சி ஏற்பட்டுவிட்டதால்* international flights, domestic flights *எல்லாம் வந்துவிட்டதால், பெரிய விமானங்கள்* A321, Boeing 767 *போன்றவை இறங்கும்போது, விமானங்கள் இறங்குவதற்கு இடம் போதுமானதாக இருக்கிறதேயொழிய, முழு* load, *அதாவது இருக்கிற* capacity passengers*–ஐ விமானத்தில் கொண்டு வர முடியவில்லை. ஏனென்றால், அவ்வளவு கொண்டு வந்தால்* length *போதாது என்பதால், வருகிற* flight *கூட* constraint*–உடன்தான்* operate *ஆகிக்கொண்டிருக்கின்றன. அதனால், தங்கள் வாயிலாக நான் கேட்க விரும்புவது என்னவென்றால், இந்தப் பணிகளை விரைவுபடுத்தி, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக இந்த நிலத்தைக் கையகப்படுத்தி,* Indian Airports Authority*–இந்திய விமான நிலைய ஆணையத்திடம் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விமான நிலையத்திற்கு நில எடுப்புப் பணிகள் சம்பந்தமாக நான் ஏற்கெனவே கூறியதுபோல, வருவாய்த் துறையும், போக்குவரத்துத் துறையும் இணைந்து இதற்கான பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததுபோல, நில எடுப்பு சம்பந்தமான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலில் ரூ.116.21 கோடி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள். பொருளாதார வளர்ச்சிக்கு உட்கட்டமைப்பு வசதிகள் எவ்வளவு முக்கியம் என்பது நம் எல்லோருக்கும் தெரியும். அது மட்டுமல்லாமல், தென் மாவட்டங்களின் வளர்ச்சிக்கு உட்கட்டமைப்பு வசதிகள் மிகவும் தேவைப்படுகின்றன. Industrial Corridor எல்லாம் announce செய்திருக்கிறோம். International Cargo–க்காக B.C.A.S. ஆய்வு செய்து, Customs Agents appoint செய்து, கூடிய விரைவில் அதற்கான approval–ம் வரவிருக்கிறது. ஏற்கெனவே, கடந்த ஆண்டு பயணிகள் எண்ணிக்கை 22½ சதவிகிதமும், விமானங்கள் வருகை மற்றும் புறப்பாடு 20 சதவிகிதமும் அதிகரித்திருக்கின்றன. இந்த ஆண்டு 40 சதவிகிதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. 9 தென் மாவட்டங்களில் இருக்கின்ற 58 உறுப்பினர்கள் சார்பாக நான் கேட்க விரும்புவது, பட்ஜெட்டில் 1 இலட்சத்து 80,000 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளதில், உட்கட்டமைப்பு வசதிகளுக்காக ஒரு வருடத்தில் கிட்டத்தட்ட ரூ.30,000 கோடி முதல் ரூ.40,000 கோடி ரூபாய் வரை செலவு செய்கிறோம். மதுரை விமான நிலைய விரிவாக்கத்திற்கென மாநில அரசு ரூ.116 கோடி செலவு செய்தால், மத்திய அரசு நிதியைக் கொண்டு கட்டடம் expansion, runway போன்ற பணிகளைச் செய்து கொடுத்தால் தென் மாவட்டங்கள் வளர்ச்சியடையும் வண்ணம் பல நன்மைகள் கிடைக்கும். பல

வேலைவாய்ப்புகள் கிடைக்கும். Industrial Corridor வளர்ச்சிக்கும் வாய்ப்பாக அமையும் என்ற வகையில், மீண்டும் ஒரு முறை இதன் அவசரத்தை உணர்த்தி, உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரமாக செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

திரு. பழனிவேல் தியாக ராஜன்: ஏனென்றால் இதில் 140 ஏக்கர் நிலம் அரசு புறம்போக்கு என்று சொல்லிவிட்டார்கள். இதனால் பாக்கி இருப்பது நானூற்று சொச்சம் ஏக்கர்தான். அதை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கையகப்படுத்தி விமான நிலைய ஆணையத்திடம் கொடுத்தால் பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் நன்றாக இருக்கும். அதாவது Investment return benefit பல மடங்கு வரும் என்ற வகையில் இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு சென்று சிறிது அவசரமாகச் செய்ய வேண்டும் என்று உங்கள் வாயிலாக வேண்டிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய சென்னை விமான நிலையம், கோவை விமான நிலையம், திருச்சி, மதுரை போன்ற விமான நிலையங்களிலே நிலம் எடுப்பது சம்பந்தமாக பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. மத்திய அரசினுடைய நில எடுப்புச் சட்டத்தின்கீழ் நிலங்களுடைய மதிப்பு பலமடங்கு உயர்ந்திருப்பதன் காரணங்களினால் நில உரிமையாளர்களுக்குச் செலுத்த வேண்டிய தொகை மிக அதிகமாக இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று அதை விரைந்து முடித்துக் கொடுப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2017 ஜூலை 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி அவர்கள்.*

திரு. கரி. இராமசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இப்பொழுது புதியதாக 3 இடங்களிலே விமான நிலையங்கள் அமையயிருப்பதாக அறிகிறேன். எங்கள் பகுதியைப் பொறுத்தமட்டில் செட்டிநாடு என்ற இடத்தில் சிறிய விமானங்கள் இறங்குவதற்கு இப்பொழுதே தளங்கள் எல்லாம் இருக்கின்றன. இராமநாதபுரத்தைச் சார்ந்தவர்கள், சிவகங்கையைச் சார்ந்தவர்கள், புதுக்கோட்டையைச் சார்ந்தவர்கள் எல்லாம் நீண்ட நாட்களாக அதை விரும்புகிறோம். அடுத்த விமான நிலையம் செட்டிநாட்டிலே அமைவதற்கு அரசு உறுதுணையாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல விமான நிலையம் அமைப்பதல்ல. ஏற்கெனவே இருக்கக்கூடிய தனியார் விமான நிலையங்களிலும் அரசினுடைய விமான நிலையங்களிலும், சிறிய இரக விமானங்களை அதாவது* ATR flight service–*ஐக் கொண்டுவருவதற்காக மத்திய அரசு* UDAN *திட்டம் என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரின் விவாதத்தின்போதே மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் அதைப்பற்றி விளக்கமாகக் கேட்டிருந்தார். 7 இடங்களைத் தேர்வு செய்து பரிந்துரை செய்ததில் 3 இடங்களில் மட்டுமே சிறிய இரக* ATR *விமானங்களை இயக்குவதற்கு விமான நிலையத் துறை நிறுவனங்கள் ஒப்புதல் அளித்திருக்கின்றன. அந்த 3 இடங்களைத் தவிர, மீதி இருக்கக்கூடிய இடங்கள் பரிசீலனையில் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஏற்கெனவே இருக்கக்கூடிய இடங்களில், கயத்தாறில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் இரண்டாம் உலகப் போரின்போது ஏற்படுத்தப்பட்ட அந்த runway–*ஐப் பயன்படுத்தி விமானங்களை இயக்குவதற்கும் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, ஒசூர், சேலம், நெய்வேலி ஆகிய 3 விமான நிலையங்களை மட்டும் முதலில் தேர்வு செய்திருக்கிறார்கள். இன்னும் படிப்படியாக*

இருக்கக்கூடிய இடங்களிலே அந்த சிறிய விமானங்களை இயக்கும் அந்தத் திட்டத்தின்கீழ் இயக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். மத்திய அரசின் UDAN திட்டத்தின்கீழ் இயங்கக்கூடிய ATR flight–ல் இருக்கக்கூடிய மொத்த இருக்கைகளிலே 50 சதவிகித இருக்கைகள் ரூ.2,500/–க்குக்கீழ் இருக்க வேண்டும் என்று விதிமுறையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே அந்தக் கோரிக்கையை எடுத்துச் சொல்லி இன்னும் அதிக இடங்களிலே விமான நிலையங்களை அமைப்பதற்குண்டான நடவடிக்கைகளை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. ஆறுக்குட்டி, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

179—

தரம் உயர்த்துதல்

***2714—திரு. வி.சி. ஆறுக்குட்டி:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கவுண்டம்பாளையம் தொகுதி, பெரியநாயக்கன்பாளையம் ஒன்றியம், 24. வீரபாண்டி ஆனைக்கட்டியிலுள்ள பழங்குடியினர் உண்டி, உறைவிட உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–05

மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கல்வித் துறையில் அம்மா தந்த சீதனம். இதுவரை யாரும் செய்யாத நூதனம். ஏழைகளின் இதயக்